**நாள் : 30.08.2023**

## அசல் வழக்கு எண்: 12 /2020

வா.சா.-1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

வழக்கு தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் . ஆலாத்தூரல் உள்ளது. அது புஞ்சை நிலமாகும். தாவா சொத்தை தவிர்த்து வேறு சொத்துகள் எனக்கு சொந்தமாக அதே கிராமத்தில் உள்ளதா என்றால் இல்லை . தாவா சொத்திற்கு உண்டான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அந்த சொத்திற்கு பட்டா கிடையாது . தாவா சொத்திற்குண்டான பட்டா அல்லது இதர பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை . தாவா சொத்தை யார் எழுதிக்கொடுத்தாரகள் என்றால் கிருஷ்ணன் மற்றும் ராமன் இருவரும் எழுதிக்கொடுத்தார்கள். தாவா சொத்தைப்பொறுத்து கிருஷ்ணன் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்குண்டான பட்டா கிருஷ்ணன் பெயரில் உள்ளதா என்றால் இல்லை . தாவா சொத்தின் அமைப்பை நிரூபிக்க ஏதேனும் புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை , தாவா சொத்து என்ன அமைப்பில் உள்ளது என்றால் காட்டுக்கருவை உள்ளது . அந்த சொத்தில் அரசாங்கத்தில் என்ன செய்தார்கள் என்றால் ஒன்றும் செய்யவில்லை.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

(Sd/-A.Seethalakshmi)
District Munsif
Mannargudi.